# மணப்பாறை நகராட்சி

**2019 – ஆம் ஆண்டு ஜீன் மாதம் ( 06.06. 2019) 06 –ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 06.06.2019 | **பொருள் – 1**<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நுண் உரமையத்தில் (Onsite Compost centre) வீடுகளில் சேகரம் செய்யும் மக்கும் குப்பைகள் மூலம் உரமாக்கல் பணி நடைபெற்று வருகிறது.<br>மேற்காணும் நுண் உர மையத்தில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரத்தினை பொது மக்கள் மற்றும் விவசாய பெருமக்களுக்கு வழங்கிடவும், அதற்கான விலை நிர்ணயம் செய்யவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. இயற்கை உரம் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50/– என விற்பனை செய்யலாம்<br>3. 5 கிலோவிற்கு கீழ் கோரும் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கலாம்<br>**(993/2019/எச்1)** | **தீர்மான எண். 549 அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN45AZ - 2257–க்கு தகுச்சான்று பெற மராத்து பணிகள் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.46,000/– செலவினம் மேற்கொள்ளவும் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>**(1160/2019/எச்1)** | **தீர்மான எண்.550 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 06.06.2019 | **பொருள் – 3**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TDY - 1660 க்கு தகுச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.46,000/– செலவிடவும், விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(1161/2018/எச்1) | **தீர்மான எண்.551**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 4**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16914/2016/P3 நாள்.04.01.19ன்படி, இந்நகராட்சி பகுதியில் சேகரம் ஆகும் மின்னனு கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை சேகரம் செய்ய நகராட்சி இட ஒதுக்கீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பேரில் கீழ்க்கண்ட விபரப்படி இடஒதுக்கீடு செய்யலாம்.<br>1. மின்னனு கழிவுகள் – 1. நகராட்சி அலுவலக வளாகம்<br>2.பொது சுகதார பிரிவு அலுவலகம் வாணக்காரன் தெரு.<br>2. கட்டிட இடிபாடு கழிவுகள் ( C & D Waste ) – அண்ணா நகர் T.S.No : 753 (Part)<br><br>மேற்காணும் இடங்களில் மட்டும் பொது மக்கள் மின்னனு கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுவதற்கு நாளிதழ் வாயிலாக விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.20,000/– செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(94/2019/எச்1) | **தீர்மான எண்.552**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 5**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளிலும் உள்ள குப்பைகளை தரம் பிரித்து நுண்உர மையத்திற்கு அனுப்பியது போக மீதமுள்ள மக்கும் குப்பைகளை திருச்சி – திண்டுக்கல் பைப்பாஸ் சாலையில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. மேற்காணும் இடமானது முழுவதும் நிரம்பி உள்ளதால், நகராட்சி லாரி வாகனங்கள் உள்ளே செல்ல வழிவகை இல்லை. மேலும் மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற உள்ளதாலும் பொது அவசர அவசியம் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்காணும் உரக்கிடங்கினை Hitachi இயந்திரம் மூலம் நிரப்புதல் பணி | **தீர்மான எண்.553**<br>**பதிவு செய்யப்பட்டது** |

உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ரூ.50,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொண்டமையினை மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. பதிவு செய்யலாம்
2. மேற்காணும் பணிக்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டமையினை அங்கீகரிக்கலாம்.

**(989/2018/எச்1)**

---

06.06.2019

**பொருள் – 6**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள குப்பை கிடங்கில் Hitachi இயந்திரம் மூலம் சமன் செய்யும் பணிக்கு செலவினம் ரூ.50,000/– மேற்கொள்ள தமிழ்நாடு நகராட்சி சட்டம் பிரிவு 15–ன் படி, அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ( 1மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1 | திரு.எ.அருள்சௌந்தர் ராஜ், நகராட்சி ஒப்பந்ததாரர், மணப்பாறை. | ரூ.1800 +12%GST |
| 2 | ஸ்ரீ வாசு தேவன், எர்த் மூவர்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை | ரூ.1900 +12%GST |
| 3 | ஸ்ரீ குமரன், எர்த் மூவர்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை | ரூ.1950 +12%GST |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் ஒப்பதப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமையை மன்றத்தில் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. பதிவு செய்யலாம் **(989/2018/எச்1)**

**தீர்மான எண்.554**
**பதிவு செய்யப்பட்டது**

---

06.06.2019

**பொருள் – 7**

மணப்பாறை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மினிபவர் பம்புகளில் ஏற்படுகின்ற பழுதுகளை சரி செய்யும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதற்கும் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.937105 /– வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –** **1920** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **15–ன்** கீழ்
பணி மேற்கொண்டதற்கு மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண். 1205 /2019/இ1**

**தீர்மான எண்.555**
**பதிவு செய்யப்பட்டது**

06.06.2019

**பொருள் – 8**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.KDis **32976**/J3/2018 நாள்.**25.03.2019**–ன்படி, மணப்பாறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை முழுமையாக செயல்படுத்திட ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் **107** துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டதன் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் **2018–19** ஆண்டிற்கான பணியாளர் விலை விகித பட்டியல் அடிப்படையில், ESI, EPF, காப்பீடு சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள், சேவை கட்டணங்கள் உட்பட செலவினத் தொகை நாள் ஒன்றுக்கு பணியாளர் ஒன்றுக்கு கீழ்கண்டவாறு

| வ. எண் | விபரம் | தொகை (நபர் ஒன்றுக்கு) | | |
|---|---|---|---|---|
| | | நாள் ஒன்றுக்கு | மாதம் ஒன்றுக்கு | வருடம் ஒன்றுக்கு |
| 1 | மாவட்ட ஆட்சியர், திருச்சி அவர்களின் **2018–19** ஆண்டிற்கான தொழிலாளர் விபர பட்டியல் | 360.00 | 9360.00 | 112320.00 |
| 2 | ESI (**3.25**%) | 11.70 | 304.20 | 3650.40 |
| 3 | EPF(**13.16**%) | 47.38 | 1231.88 | 14782.56 |
| 4 | Insurance (**0.5**%) | 1.80 | 46.80 | 561.60 |
| 5 | சீருடை & பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.**3000**/ பணியாளர்/வருடம் | 8.21 | 213.46 | 2561.52 |
| 6 | நிர்வாக கட்டணம் | 18.00 | 468.00 | 5616.00 |
| | | **447.09** | **11624.34** | **139492.08** |

எனவே மேற்காணும் அடிப்படையில் **107** நபர்களுக்கான தோராய செலவின தொகைக்கு ரூ.**152**லட்சம் (ரூ**141176** X **107** நபர்கள்) அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி முறைகளின்படி நாளிதழ் மற்றும் அரசிதழில் அறிவிக்கை வெளியிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**1.00** லட்சம் செலவினம் மேற்கொள்ளவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. திடக்கழிவு மேலாண்மை திட்ட அவசியம் கருதி அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(94/2015/எச்1)**

**தீர்மான எண்.556**
**அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 06.06.2019 | **பொருள் – 9**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**9584/2018**/P3 நாள்.**06.08.2018**–ன்படி, இந்நகராட்யில் சேகரம் ஆகும் உலர் கழிவுகளை (Wet Wast) இறுதியாக்கம் செய்யும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனம் அரியலூருக்கு அனுப்ப ஏதுவாக உலர் கழிவுகளை இறுக கட்டி வைக்க இயந்திரம் (bailing machine) வாங்கிடவும், ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ**5.75**லட்சம் செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(993/2019/எச்1) | **தீர்மான எண்.557**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 10**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.**29.05.2019** மற்றும் **03.06.2019**–ன்படி, நகராட்சி பகுதியில் முழுமையாக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயலாக்கம் செய்யும் பொருட்டு, நகராட்சி பகுதியில் உற்பத்தியாகும் அபாயகரமான கழிவுகளை (Hazardous waste) சேகரம் செய்து Inceneration மூலம் இறுதியாக்கம் செய்யும் பொருட்டு நுண்ணுரக்குடில் அருகே Inceneration அமைத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**1.00** லட்சம் செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(1159/2019/எச்1) | **தீர்மான எண்.558**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 11**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN455 BZ 7050ல் Engine Oil Coolandoil உள்பட ஆயில் சர்வீஸ், Head Lamp Class மாற்றுதல், Water Wash செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு பாராளுமன்ற தேர்தல் –**2019** நடைமுறைகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கான தொகை ரூ.**22522/–** வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.559**<br>**பதிவு செய்யப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 06.06.2019 | **பொருள் – 12**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN45 L 7670ல் Right side wheel with bearing, CenterJoint, Self Motor ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்ய பாராளுமன்ற தேர்தல் –2019 நடைமுறைகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் தொகை ரூ.5800/– வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.560**<br>**பதிவு செய்யப்பட்டது** |
| 06.06.2019 | **பொருள் – 13**<br>இந்நகராட்சியின் குடிநீர் பிரிவு பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கு பயணப்பட்டியல் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.561**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 14**<br>இந்நகராட்சியின் பொதுப்பிரிவு பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கு பயணப்பட்டியல் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.562**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 06.06.2019 | **பொருள் – 15**<br>2019 – 20 நிதியாண்டுக்கு தமிழ்நாடு நகராட்சியில் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ.50,000/– செலுத்தவும், செலவின தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.563**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**